BIBLE 316

# வேதாகமம் என்றால் என்ன?

**வேதாகமம் என்றால் என்ன?** அது தேவன் உங்களுடன் பேசுவதாகும். அது தேவனைப் பற்றியது மட்டுமல்ல, தேவனிடமிருந்தே வருவது. அது உத்வேகம் அளிப்பதற்கும் மேலான ஒன்று. அது அருளப்பட்ட (தேவ ஆவியினால் அருளப்பட்ட) ஒன்று. அதை வாசியுங்கள். அதற்கு செவிகொடுங்கள். அதைக் குறித்து சிந்தியுங்கள். அதை உங்கள் வாழ்வில் கைக்கொள்ளுங்கள். *"நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்"* என்று 1 பேதுரு 2:3-ல் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறார்.

**வேதாகமம் தனித்துவமிக்கது, எப்படி?** அதிலுள்ள 66 புத்தகங்களும் 1600 ஆண்டுகளாக, நாற்பது மனிதர்களைக் கொண்டு, அத்தனை நூற்றாண்டுகள் முழுவதும், பொதுவான மற்றும் சீரான ஒரே கருப்பொருளை மையமாக வைத்து, (எபிரெயம், அரமாயிக் மற்றும் கிரேக்கம் என்னும்) மூன்று மொழிகளில் எழுதப்பட்டன. புதிய ஏற்பாட்டின் உண்மைத்தன்மை 5000-ற்கும் மேற்பட்ட பண்டைய முழுமையான அல்லது பகுதியான கையெழுத்துப் பிரதிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள், நவீன தொல்பொருள் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள், நிலப்பரப்பு துல்லியம் மற்றும் நீதிமொழிகள் கூறும் காலத்தால் அழியாத ஞானம் ஆகியவற்றினால் வேதாகமத்தின் துல்லியம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதுவரை எழுதப்பட்ட புத்தகங்களிலேயே மிக முக்கியமானதும், செல்வாக்கு மிக்கதுமான புத்தகம் வேதாகமமே. வேறெந்த புத்தகமும் இந்த அளவிற்கு அச்சிடப்படவில்லை, விநியோகிக்கக்கப்படவில்லை, அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்படவில்லை, வல்லமையாக வாழ்க்கை மாற்றத்தை உண்டாக்கவில்லை மற்றும் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்ததும் இல்லை. நாம் எதை விசுவாசிக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பதற்கான ஒரே இறுதி அதிகாரம் கொண்டது வேதாகமமே. மற்ற அனைத்து புத்தகங்களையும் விட வேதாகமம் உயர்ந்து நிற்கிறது.

**வேதாகமத்தின் பண்புகள் யாவை?**

வேதாகமம் தேவனால் அருளப்பட்டது. *"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது"* 2 தீமோத்தேயு 3:16.

வேதாகமம் சத்தியமானது. இயேசு, *"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்"* என்று யோவான் 17:17-ல் ஜெபித்தார்.

வேதாகமத்தில் மிக நுண்ணிய விவரங்களும் துல்லியமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. *"வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* மத்தேயு 5:18. இன்றைய வார்த்தைக்கு-வார்த்தை மொழிபெயர்ப்புகளும் 99%-ற்கும் மேல் துல்லியமாக இருக்கும் அளவிற்கு ஆதி கையெழுத்துப் பிரதிகளின் துல்லியம் காக்கப்பட்டிருக்கிறது.

வேதாகமம் சுத்தமானது. *"கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தச் சொற்களாயிருக்கிறது"* சங்கீதம் 12:6.

வேதாகமம் நித்தியமாக நிலைத்திருக்கும். *"புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்"* ஏசாயா 40:8. வேதாகமம் ஆதியில் எழுதப்பட்டபோது இருந்ததைப் போலவே இன்றைய காலத்திற்கும் ஏற்றதாக உள்ளது.

வேதாகமம் வல்லமை வாய்ந்தது. *"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது"* எபிரெயர் 4:12.

**தனிப்பட்ட விதத்தில் வேதாகமத்திலிருந்து வரும் பலன்கள் யாவை?**

வேதாகமம் நம்மை ஆயத்தப்படுத்துகிறது. *"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"* 2 தீமோத்தேயு 3:16–17.

வேதாகமம் நாம் பாவம் செய்யாமலிருக்க உதவுகிறது. *"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே. நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்"* சங்கீதம் 119:9, 11.

வேதாகமம் இன்றைய நாளில் (அடுத்த அடி எடுத்து வைப்பதற்கான) வழிநடத்துதலையும், எதிர்காலத்தில் (போக வேண்டிய) பாதையையும் காண்பிக்கிறது. *"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"* சங்கீதம் 119:105.

வேதாகமம் நமக்கு ஞானம் கொடுக்கிறது. *"உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்"* சங்கீதம் 119:130. பழைய ஏற்பாட்டில் உள்ள நீதிமொழிகளில் காலத்தால் அழியாத ஞானம் காணப்படுகிறது.

வேதாகமம் கஷ்டத்தில் நமக்கு உதவுகிறது. *"அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது"* என்று சங்கீதம் 119:50 நம்மை உற்சாகப்படுத்துகிறது.

வேதாகமம் நம்பிக்கை ஊட்டுகிறது. *"தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு [பழைய ஏற்பாட்டில்] எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது"* ரோமர் 15:4.

வேதாகமம் சமாதானம் அருளுகிறது. *"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை"* என்று சங்கீதம் 119:165 வாக்குப்பண்ணுகிறது.

வேதாகமம் சந்தோஷம் தருகிறது. *"உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது"* என்று எரேமியா 15:16 அதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறது.

**எப்படி வேதாகமத்தை வாசிக்க அல்லது செவிகொடுக்க வேண்டும்?** ஒன்றுக்கும் மேற்பட்ட வசனங்களை ஆய்வு செய்ய வேண்டும். *"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"* என 2 தீமோத்தேயு 3:16–17 வசனங்களில் உள்ள நான்கு நோக்கங்களை கருத்தில் கொள்ளவும். வேதாகமத்தை வாசிக்கும்போது அல்லது கேட்கும்போது, இந்த நான்கு கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள். இது எனக்குப் போதிப்பது என்ன? இது என்னை எப்படிக் கடிந்து கொள்கிறது? நான் எவற்றை சீர்திருத்திக் கொள்ள வேண்டும்? நான் இன்னும் நீதியுள்ளவனாகும்படி இது என்னை எப்படிப் பயிற்றுவிக்கிறது?

**என்னிடம் வேதாகமம் இல்லையென்றால் என்ன செய்வது?** நல்லதொரு வேதாகம மொழிபெயர்ப்பை வாங்கிக்கொள்ள அவசியமான எல்லா முயற்சிகளையும் எடுங்கள். உங்களால் வாங்க முடியவில்லை என்றால், வாசிப்பதற்கும், கேட்பதற்கும் இணையத்தில் ஏராளமான மொழிபெயர்ப்புகள் உள்ளன. ஒரு நண்பர் அல்லது சில நண்பர்களுடன் இணைந்து ஒரு வேதாகமத்தை வாங்கிப் பகிர்ந்து படிக்க முடியுமா என்று பாருங்கள். அல்லது உங்கள் சபையில் அல்லது உடன் விசுவாசிகளிடம் ஒரு குழுவில் உள்ளவர்களுக்கு ஒருவர் வேதாகமத்தை வாசித்துக் காண்பிக்கும்படியும், மற்றவர்கள் அதை கவனமாகக் கேட்கும்படியும் ஏற்பாடு செய்யுங்கள். *"அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே [அதற்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறவர்களே] அதிக பாக்கியவான்கள்"* லூக்கா 11:28.

**வேதாகம போதகர்கள் மற்றும் தலைவர்களுக்கான சில விசேஷித்த வசனங்கள் யாவை?** வார்த்தையில் நிலைத்திருந்து (வாழ்ந்திருந்து) இயேசுவின் சீஷராயிருங்கள். *"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்"* என்று யோவான் 8:31–ல் கூறினார். உத்தமனாக அங்கீகாரம் பெற வேதாகமத்தை ஆராய்ச்சி செய்யுங்கள். *“நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"* 2 தீமோத்தேயு 2:15.

**வேதாகமம் ஏன் நித்திய முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது?** *"இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது"* யோவான் 20:30–31, என்று அப்போஸ்தலனாகிய யோவான் தாம் எழுதிய சுவிசேஷத்தின் நோக்கத்தை விளக்குகிறார். இந்த நோக்கம் வேதாகமம் முழுவதற்கும் பொருந்தும். எப்படி இயேசுவை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வது? என்பதற்கான பதிலை www.Gospel316.org என்ற வலைதளத்தில் அறிந்துகொள்ளுங்கள்.

**"புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்" ஏசாயா 40:8.**

---

ஜான் டி. மோரிஸின் *வேதாகமம் என்றால் என்ன?* © 2025 என்னும் படைப்பு ஆக்ட்ஸ் ஒன் எய்ட் நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை எவ்விதத்திலும் மாற்றாமல் அதன் விசுவாச அறிக்கையோடு கூட இலவசமாக அச்சிடலாம், பிரதி எடுக்கலாம், அஞ்சல், மின்னஞ்சல் அல்லது செய்திகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். முதல் பக்கத்தின் துவக்கத்தில் உங்கள் ஊழியம் அல்லது சபையின் பெயர் அல்லது சின்னத்தையும், இரண்டாம் பக்கத்தின் அடிப்பகுதியில் உள்ள கோட்டிற்கு மேல் உங்கள் முகவரியையும் அச்சிட்டுக் கொள்ளலாம். Bible316 முற்றிலும் வேதாகமத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது. எல்லோரும் இயேசுவை விசுவாசிக்கவும், பின்னர் அவருடைய சீஷர்களாக வளரவும் உதவுவதே இதன் நோக்கம். Hello@Mail316.org என்ற மின்னஞ்சல் முகவரியில் ஆக்ட்ஸ் ஒன் எய்ட் நிறுவனத்திற்கு மின்னஞ்சல் அனுப்பலாம். ஆங்கிலமல்லாத மற்ற மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து உதவியவர்கள் www.ChristianLingua.com. வேதாகமம் என்றால் என்ன? www.Bible316.org என்ற வலைதளத்தில் 48 மொழிகளில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில பதிப்பின் வேதவசன மேற்கோள்கள் த லாக்மன் ஃபவுன்டேஷன்'ஸ் நியூ அமெரிக்கன் ஸ்டான்டர்ட் பைபிள் 1995-லிருந்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மொழிபெயர்ப்பின் வேதவசன மேற்கோள்கள் தமிழ் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (பழைய பதிப்பு) எடுக்கப்பட்டுள்ளன.